/1

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066985

1. District : சேலம் மாவட்டம் | PS: ஊ.த.க பிரிவு காவல்நிலையம் | Year: 2019 ஆண்டு | FIR No.: 9/AC/2019 மு.த.அ. எண் | Date: 25/4/2019 நாள்

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம். Sections பிரிவுகள்: 167, 420, 409 r/w 109

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7, 13(2) r/w 13(1)(c) & (d)-PC Act 1988.

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 2014 ம் வருடம் முதல் | Date to : நாள் வரை 2016 ம் வருடம் வரை.

   Time Period நேர அளவு — | Time from : நேரம் முதல் — | Time to : நேரம் வரை —

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.4.2019 | Time நேரம் : 16.00 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.4.2019 | Time நேரம் : 16.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக முன் விசாரணையின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 60 கி.மீ வடமேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் கொளத்தூர் சார்பதிவாளர் (முகாம்) அலுவலகம். சேலம் மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ரா. கோமதி. | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெ. பரமசிவம்.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45/2019 | (d) Nationality : நாட்டினம் இந்தியர் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. மீனாட்சி, முன்னாள் சார்பதிவாளர், மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகம் மேட்டூர். தற்போது சார்பதிவாளர், ஊத்துக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகம் திருவள்ளூர் மாவட்டம். மற்றும் சிலர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo-motto.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
25/4/19.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.04.2019 / 17.00hrs.

Name: பெயர் ...ர. சோமசேகர். காவல் ஆய்வாளர்.
Rank: நிலை ..................No. எண் ... ஊரக பிரிவு. சேலம்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-

இன்று 25.04.2019 ம் தேதி காலை 16.00 மணிக்கு சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக உத்தரவு PE 186/2017/REGN/SL, Dated.03.04.2019 ன் படி எதிரி திருமதி.மீனாட்சி, முன்னாள் சார்பதிவாளர், மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகம், மேட்டூர், சேலம் மாவட்டம் தற்போது சார்பதிவாளர், ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் மாவட்டம் மற்றும் சிலர் மீது சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.9/AC/2019 ல் பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு:- சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரக உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்ட முதல் விசாரணையில் எதிரி திருமதி மீனாட்சி மேட்டூர் சார் பதிவாளராகப் பணியாற்றியபோது, ஆவணங்களைப் பதிவு செய்த போது செய்த முறைகேடுகள் குறித்து கீழ்க்கண்ட பொருண்மைகள் தெரியவருகிறது. எதிரி திருமதி மீனாட்சி, சேலம் மாவட்டம், மேட்டூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக 20.02.2014 ஆம்ஆண்டு முதல் 02.08.2017 வரை பணிபுரிந்து வந்ததால் எதிரி 1988ம் வருட ஊழல் தடுப்பு சட்டப் பிரிவு 2 (c)–ன்படி பொது ஊழியராவார். எதிரியானவர் 2016ம் ஆண்டு தனது பணிக் காலத்தில் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் நீதிப் பேராணை எண்.19566/2015 என்ற வழக்கில் அங்கீகரிக்கப் படாத வீட்டு மனைகளை பதிவு செய்யக் கூடாது என்ற உத்தரவு பிறப்பித்திருந்ததை அறிந்தும், மேட்டூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் 21 ஆவணங்களும், கொளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் அவரது கட்டுப்பாட்டில் 6 ஆவணங்களும், முறைகேடாக பதிவு செய்திருப்பது பதிவுத்துறை தலைவர் அவர்களுடைய அறிவுரை எண். 15781–T2/2015 நாள் 30.04.2015 சுற்றறிக்கையின்படியும், விதிமுறைக்கு மாறாக கையூட்டு பெற்றுக் கொண்டு பதிவு செய்திருப்பது தெரியவருகிறது. எதிரியானவர் 2016ம் ஆண்டு தனது பணிக் காலத்தில் தனது உதவியாளர் மூலமாக மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த ஆவண எண்.1465/2016, 22.9.2016ம் தேதியிட்ட ஆவணத்தைப் பரிசீலித்ததில், சொத்து மதிப்பு ரூ.48 லட்சம் எனக் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசு வழிகாட்டியில் குறிப்பிட்டுள்ளபடி மேற்சொன்ன ஆவணத்திலுள்ள மனை நிலத்தின் மதிப்பு ரூ.10,44,400/–ஆகவும், கட்டடத்தின் மதிப்பு ரூ.37,53,600/– ஆகவும் வருகிறது. பதிவுத்துறை தலைவர் அவர்களின் கடித எண். 3121/உ1/2015 நாள் 11.02.2015 என்ற அறிவுரையின்படி கட்டட மதிப்பு ரூ.25 லட்சத்திற்கு மேல் உள்ள ஆவணங்கள் மற்றும் சிறப்பு வகை கட்டடங்கள் பதிவுத் துறையில் உள்ள உதவி செயற்பொறியாளர் அவர்களால் களப்பணி பார்க்கப்பட்டு கட்டட மதிப்பு தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலை பின்பற்றாமல் எதிரியானவர் அவரது உதவியாளர் சுசீந்தர் என்பவருடன் சேர்ந்து தன்னிச்சையாக ஆவண மதிப்பு

நிர்ணயித்து தவறான பலன் அடைந்து ஆவணத்தை முறைகேடாகப் பதிவு செய்திருப்பது தெரிய வருகிறது. மேலும் எதிரியால் உதவியாளர் சங்கர் மூலமாக கொளத்தூர் சார்பதிவாளர் முகாம் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.602/2016 நாள் 02.05.2016ம் தேதியிட்ட ஆவணத்தைப் பரிசீலனை செய்ததில் அந்த ஆவணத்தில் கண்டுள்ள நிலமானது விவசாய நிலமாக காட்டப்பட்டுள்ளது. மேலும் எதிரியின் அறிவுரைப்படி அந்த ஆவணம் கொளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு செய்தது போன்று மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்சொன்ன ஆவணத்தில் கண்டுள்ள இடத்தில் 36 வீடுகள் மற்றும் குடிசை வீடுகள் கட்டப்பட்டு குடியிருந்து வருகின்றனர். பொதுமக்களின் புகாரின் அடிப்படையில் உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் எதிரி புலத்தணிக்கை செய்து 36 வீடுகள் மற்றும் குடிசை வீடுகள் இருப்பதை அறிக்கையாக மாவட்ட பதிவாளருக்கு அனுப்பியதின் பேரில் மேற்சொன்ன ஆவணத்திற்கு அரசுக்கு சேர வேண்டிய முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் மற்றும் இணக்கக் கட்டணம் மொத்தம் ரூ.5,73,800/- அரசுக்கு ஆவணத்தைப் பதிவு செய்தவர் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டும் இதுவரை தொகை செலுத்தப்படாமல் உள்ளதால் எதிரி, அவருடைய தலைமை எழுத்தர் திரு சங்கர் என்பவருடன் சேர்ந்து வீட்டு மனை நிலத்தினை மதிப்பினைக் குறைத்து மதிப்பீடு செய்து அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தி உள்ளது தெரியவருகிறது. மேலும், எதிரியால் மேட்டூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.2039/2014, 2040/2014 ஆகிய ஆவணங்களைப் பரிசீலித்ததில் 8933 சதுர அடிகள் கொண்ட கட்டிடத்துடன் கூடிய மனை நிலத்தில் பொதுவில் சரிபாதியாகவும், கட்டடத்ததின் தரைதளம் குணசேகரன் என்பவர் பெயரிலும், முதல் தளம் குணசேகரன் மனைவி வினோதா என்பவர் பெயரிலும் தலா ரூ.49,50,000/- வீதம் மொத்தம் ரூ.99 லட்சத்திற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஒவ்வொரு ஆவணத்திற்கும் ஆவணப் பதிவின் போது முத்திரைக் கட்டணம் 7% ஆக ரூ.3,46,500/-ம் பதிவுக் கட்டணம் 1% ஆக ரூ.49,500/- வசூல் செய்வதற்குப் பதிலாக எதிரி முத்திரைக் கட்டணமாக ரூ.30,000/-, பதிவுக் கட்டணமாக ரூ.10,305/- மட்டும் வசூலித்து அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியிருப்பது தெரிய வருகிறது. மேலும், மேற்சொன்ன ஆவணங்களில் காட்டப்பட்ட கட்டடமானது ஜெயலட்சுமி திருமண மண்டபம் என்ற பெயரில் இயங்கி வந்து, குணசேகரன் - வினோதா தம்பதியர் வாங்கிய பின் புதுப்பிக்கப்பட்டு, பழனியம்மாள் திருமண மண்டபம் என்ற பெயரில் இயங்கி வரும் வர்த்தகக் கட்டடம் ஆகும். பதிவுத் துறைத் தலைவர் ஆணையின்படி ரூ.25 லட்சத்திற்கு மேல் கட்டிட மதிப்பு வரும்போது உதவி செயற்பொறியாளர் அவர்களால் களப்பணி பார்க்கப்பட்டு கட்டிட மதிப்பு தீர்மானிக்கப்பட்டு உரிய கட்டணம்

வசூலிக்கப்பட்ட பின்பே ஆவணங்கள் உரியவரிடம் கொடுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை மீறி எதிரியானவர் சட்ட விரோதமான பலனை அடைந்து தன்னிச்சையாக குறைவான முத்திரைக் கட்டணம் நிர்ணயம் செய்து, அரசை ஏமாற்றி அரசுக்கு நிதி இழப்பை ஏற்ப்படுத்தியிருப்பது தெரிய வருகிறது. மேலும் எதிரியானவர் மேட்டூர் நகராட்சி வார்டு எண். என்.டி. டி.எஸ் நம்பர் 4/1ல் ஜெயலட்சுமி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்குச் சொந்தமான சுமார் 30க்கும் மேற்பட்ட வீட்டுமனை ஆவண எண்கள் 1868/16, 1625/15, 1471/15, 681/15, 519/15, 680/15, 1694/15, 1673/15, 1541/16, 2105/15, 1656/16, 1655/16, 990/15, 2078/15, 1960/15, 413/16, 1686/16, 2217/15, 2208/15, 2126/15, 2207/15, 1339/15, 423/15, 1925/15, 1202/16, 1432/16, 750/16, 906/16, 907/16, 1450/16, 1687/16 ஆகியவற்றின் வழிகாட்டி மதிப்பு ச.அ. ரூ.680/—ஐ குறைத்து மதிப்பீடாக ரூ.225/— எனக் குறிப்பிட்டு ஆவணப் பதிவு செய்தும்; மேட்டூர் நகராட்சி வார்டு பி பிளாக் 10—ல் பியட் செல் என்ற நிறுவனத்துக்குச் சொந்தமான ஆவண எண்கள் 1669/14, 1781/14, 1808/14, 2095/14, 741/15, 749/15, 1019/15, 1020/15 ஆகியவற்றின் வழிகாட்டி மதிப்பு ச.அ. ரூ.1,100/—ஐ குறைத்து மதிப்பீடாக ரூ.850/— எனக் குறிப்பிட்டு ஆவணப் பதிவு செய்தும்; ஆவண எண்கள் 1021/14, 1022/14, 1706/15, 495/16, 553/16, 608/16, 609/16, 388/16, 389/16, 744/16, 923/16, 1571/16, 1622/16 ஆகியவற்றின் வழிகாட்டி மதிப்பில் 50% மற்றும் 50%க்கும் குறைவாக 45%ல் ச.அ. ரூ.550/— மற்றும் ரூ.500/— எனக் குறைத்து மதிப்பீடாக ஆவணப் பதிவு செய்தும் விதிமுறைகளை மீறி அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியிருப்பதும் தெரிய வருகிறது. மேலும், மேட்டூர் சார்பதிவாளர் திருமதி மீனாட்சி தனது அலுவலகத்திற்கு வரும் ஆவண பதிவுகளுக்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் போக தனியாகப் பணம் கேட்டுப் பெற்றும் திரு சுரேஷ் மற்றும் அவரது சகோதரர்கள் ஆகியோரிடம் மேட்டூர் டி.எஸ் எண்.4/1ல் 4309 ச.அ. கிரயம் செய்யும்போது ஆவண எண்.1925/15ல் ஒரு செண்ட்டுக்கு ரூ.1,000/— வீதம் 4309 ச.அடிக்குத் தனக்குத் தனியாக ரூ.10,000/— கேட்டுப் பெற்றும், மேலும் அவர்களிடமே மற்றொரு ஒரு செண்ட் நிலத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை போக அவருக்குத் தனியாக ரூ.5,000/— தனியாகக் கேட்டுப் பெற்றும் மேலும் ஆவண எண்.288/16ல் வில்லங்கச் சான்று வழங்குவதற்கு எதிரி தனக்குத் தனியாக ரூ.1 லட்சம் சட்ட விரோதமாகப் பெற்றிருப்பதும் தெரிய வருகிறது. முதல் விசாரணை அறிக்கை PE.186/2017/REGN/SL—ன்படி, எதிரியின் மீது ஒரு குற்ற வழக்குப் பதிவு செய்து,புலன் விசாரணை செய்வதற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 2018ஆம் வருட திருத்தியமைக்கப்பட்ட ஊழல் தடுப்பு சட்டப் பிரிவு 17A (1)ன்படி வழக்குப் பதிவு செய்ய 30.01.2019 அன்று தகுந்த அரசு அதிகாரியிடமிருந்து அனுமதி மந்தண ஆணை பெறப்பட்டுள்ளது. எதிரி மேற்சொன்னவாறு தனது

அரசு பதவியை துஷ்பிரயோகம் செய்து, ஆவணங்களைப் பதிவு செய்யும்போது துறை விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமலும், சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பீடு செய்தும், உயர் நீதிமன்ற பேராணைக்குப் புறம்பாக ஆவணங்களைப் பதிவு செய்தும், அரசை ஏமாற்றி உள்நோக்கத்துடன் செயல்பட்டு, சட்ட விரோதமான பணப் பயன் அடைந்து, அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தி உள்ளதற்கு முதல் நோக்கு ஆதாரங்கள் இருப்பதாலும், பிடிக்கக் கூடிய குற்றம் என்பதாலும் மேற்படி எதிரி இ.த.ச. பிரிவு 167, 420, 409 மற்றும் 1988ம் வருட ஊழல் தடுப்பு சட்டப் பிரிவு 7, 13 (2) உ/இ 13 (1) (a), (c) & (d) ன்படி குற்றம் புரிந்துள்ளார் எனத் தெரிகிறது. மேலும் எதிரியின் சட்ட விரோத செயலுக்கு சிலர் உடந்தையாகவும் தூண்டுதலாகவும் இருந்திருப்பதும் தெரிய வருகிறது. எனவே சேலம் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.9 /AC/2019ல் மேற்படி எதிரி மற்றும் சிலர் மீது இ.த.ச. பிரிவு 167, 420, 409 மற்றும் 1988ம் வருட ஊழல் தடுப்பு சட்டப் பிரிவு 7, 13 (2) உ/இ 13 (1) (a), (c) & (d) உ/இ 109 இ.த.ச. ன்படி வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.

இம்முதல் தகவல் அறிக்கையின் அசலை மாண்புமிகு தனி நீதிபதி, ஊழல் தடுப்பு கண்காணிப்பு சிறப்பு நீதிமன்றம் சேலம் அவர்களுக்கும், இதன் நகல்களை இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

INSPECTOR OF POLICE,
Vigilance and Anti-Corruption
Salem - 4